22

தினத்தந்தி

## தென்மாவட்ட ஐவர் பூப்பந்தாட்ட போட்டி:

# தூத்துக்குடி அணி முதலிடம்

தூத்துக்குடி, மார்ச்.3–
தூத்துக்குடியில் நடைபெற்ற தென்மாவட்ட அளவிலான ஐவர் பூப்பந்தாட்ட போட்டியில் தூத்துக்குடி அணி முதலிடம் பிடித்து பரிசு கோப்பையை தட்டிச் சென்றது.

### ஐவர் பூப்பந்தாட்டம்

தூத்துக்குடி எஸ்.ஏ.வி.மேல்நிலை பள்ளிக்கூடம், இந்தியன் ஏவியேசன் அகாடமி, இந்தியன் இன்ஸ்டிட்டியூட் ஆப் பாராமெடிக்கல் சயின்சஸ் ஆகியன இணைந்து தென்மாவட்ட அளவிலான ஐவர் பூப்பந்தாட்ட போட்டியை எஸ்.ஏ.வி. பள்ளிக்கூடத்தில் நடத்தின. போட்டியில் தூத்துக்குடி, நெல்லை, கன்னியாகுமரி, மதுரை, திண்டுக்கல், விருதுநகர், சிவகங்கை, ராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் இருந்து 35 அணிகள் கலந்து கொண்டு விளையாடின.

### தூத்துக்குடி முதலிடம்

இந்த போட்டியில் தூத்துக்குடி இந்தியன் ஏவியேசன் அகாடமி அணி முதல் இடம் பிடித்து, கோப்பையை தட்டிச் சென்றது. மதுரை கின்ஸ்டார் அணி 2–வது பரிசையும், திண்டுக்கல் ஏ.ஆர்.பி.பி. அணி 3–வது பரிசையும், சோழவந்தான் அணி 4–வது பரிசையும் பெற்றன.

தொடர்ந்து நடந்த பரிசளிப்பு விழாவுக்கு தமிழ்நாடு பூப்பந்தாட்ட கழக மாநில துணைத்தலைவர் சீனிவாசன் தலைமை தாங்கினார். எஸ்.ஏ.வி. மேல்நிலை பள்ளிக்கூட உடற்கல்வி இயக்குனர் குப்புசாமி வரவேற்றார். இதில் சிறப்பு அழைப்பாளராக தொழில் அதிபர் சாம் கலந்து கொண்டு பரிசுகளை வழங்கினார்.

விழாவில் தூத்துக்குடி மாவட்ட கூடைப்பந்து கழக செயலாளர் சுஜேஷ் ராஜா உள்பட பலர் கலந்து கொண்டனர். ராமச்சந்திரன் நன்றி கூறினார்.

நாள் : 25.02.2017 & 26.02.2017

இடம் : தூத்துக்குடி S.A.V பள்ளி வளாகம்